கோலாலம்பூர், மே 9-

நேற்று முன்தினம் ஜாலான் சுல்தான் இஸ்மாயில் பகுதியில் வேரோடு மரம் சாய்ந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட அமலாக்கத் தரப்பினரிடம் இழப்பீடு கோரி வழக்குப் பதிவு செய்யலாம் என வழக்கறிஞர் ஃபாமி அப்துல் மொய்ன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் பெய்த அடைமழை, பலத்த காற்றின் காரணமாக சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலான வயதைக் கொண்டிருக்கும் பெரிய மரம் வேரோடு சாய்ந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்ததோடு 17 வாகனங்கள் சேதமடைந்தன.

மேலும் இதனால் அப்பகுதியில் மோனோ ரயில் சேவையும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடுக்கலாம். ஆனால் அதில் வெற்றி பெறுவது

## மரம் சரிந்த சம்பவம்:

# வழக்குத் தொடுக்கலாம்

## ஆனால் வெற்றி பெறுவது கடினம்



கடினம்.

காரணம் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தரப்பினர் இந்தச் சம்பவத்தை இயற்கைப் பேரிடர் என வகைப்படுத்துவர். இது தவிர சம்பந்தப்பட்ட மரத்தை ஊராட்சித் தரப்பினர் நல்ல முறையில் பராமரிக்கவில்லை என்பதை நிருபிப்பது கடினம்.

காரணம் நேற்று முன்தினம் அடைமழை பெய்தது. அதனால் இந்த மரம் சரிந்திருக்கும் எனக் கூற முடியும். பொதுவாக அந்த மரம் எளிதில் சரியவில்லை. இதற்கு அடைமழையே காரணம் என்று ஊராட்சி தரப்பினர் கூறுவர்.

எனவே இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தாராளமாக வழக்குத் தொடுக்கலாம். ஆனால் வெற்றி பெறுவது என்பது சாத்தியம் என்றாலும் அது மிகவும் கடினமானது என அவர் குறிப்பிட்டதாக பெரித்தா ஹரியான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

குறிப்பாக 1993ஆம் ஆண்டு நிகழ்ந்த ஹைலண்ட் டவர் சம்பவத்தை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தச் சம்பவத்தில் தீர்ப்பு ஊராட்சித் தரப்புக்குச் சாதகமாக அமைந்தது. இது தவிர அடைமழை, அதனால் மழை நீர் அதிகளவில் வழிந்தோடியதால் அந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்ததாக சம்பந்தப்பட்ட தரப்பு கூறியிருந்தது என்றார் அவர். இதனிடையே ஜாலான் சுல்தான் இஸ்மாயிலில் சரிந்த அந்த மரத்தை மாநகர் மன்றம் பராமரித்திருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு காப்புறுதி இழப்பீடு வழங்க வேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வாகனங்களுக்கு இயற்கைப் பேரிடர்களுக்கான கூடுதல் காப்புறுதி எடுத்திருந்தால் அவர்கள் சம்பந்தப்பட்ட இழப்பீட்டைக் கோரலாம் என்றும் என்றும் ஃபாமி கூறினார்